பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 13 ஞாயிற்றுக்கிழமை (28-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 162

## ஒலிம்பிக் நகரில் குண்டு வெடிப்பு!

### 2 பேர் பலி; 100 பேர் காயம்

அட்லாண்டா, ஜுலை 28

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அட்லாண்டா நகரில் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

காயமுற்றவர்களில் பலர் பொலீஸார் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு வருகை தந்தோரின் பொழுதுபோக்கிற்காக நகரின் மையத்தில் உள்ள திறந்த வெளிப் பூங்காவில் ''பொப்'' இசை நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருக்கையில் — அங்கு பல்லாயிரக் கணக்கானோர் கூடி இருக்கையில் — இக்குண்டு வெடித்திருக்கின்றது.

அப்பகுதியில் குண்டு வைத்திருப்பது பற்றிய தகவல் ஒன்று தொலைபேசி மூலம் பொலீஸாருக்குக் கிடைத்ததாகவும்—

அதனையடுத்து தேடுதல் நடத்திய பொலீஸார் விளக்குகள் பொருத்தப்பட்ட மேடை ஒன்றுக்கு அருகே வித்தியாச

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ட்ரக் மீது அ'புரத்தில் தாக்குதல்

### 3 படையினர் பலி; 21 பேர் காயம்

கொழும்பு, ஜுலை 28

அநுராதபுரம் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் சென்ற இரு வாகனங்களை புலிகள் மறைந்து தாக்கியுள்ளனர்.

தம்முனு வெவவுக்கும், ஹாட்ட கொல்லவுக்கும் இடையே இருந்து நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றதாக இலங்கை வானொலி அறிவித்தது நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் வெலி ஓயாவிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் றொக்கட்டுக்களால் ஏவப்படும் கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கிகளாலும் தாக்கினர்.

இத்தாக்குதலில் படையினரின் டிரக் ஒன்று தீக்கிரையானது. பாதுகாப்பு படையினர் விடுதலைப் புலிகள் மீது திருப்பித் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதலில் 3 படையினர் உயிரிழந்தனர்; 21 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

## ரயிலில் வெடித்த குண்டு கொழும்பில் தயாரானதா?

### அறிவதில் பொலீஸார் மும்முரம்

கொழும்பு, ஜுலை 28

தெகிவளை ரயில் குண்டு வெடிப்புக் குறித்து விசாரணை நடத்தி வரும் உயர் மட்டப் பொலீஸ் குழு இந்தக் குண்டுகள் கொழும்பு நகருக்குள்ளேயே வைத்துத் தயாரிக்கப்பட்டனவா என்பதை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக — விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் — வசந்தன் என்ற நபரைப் பொலீஸார் தேடி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-5)

## மாஜிஸ்திரேட் நீதிமன்ற விசாரணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 28

தெகிவளை ரயில் குண்டு வெடிப்புத் தொடர்பான மாஜிஸ்திரேட் நீதிமன்ற விசாரணை இன்று ஆரம்பமாகவிருக்கிறது.

வெடித்த இரு குண்டுகள் போக இராணுவத்தினரால் செயல் இழக்கச் செய்யப்பட்ட மூன்றாவது குண்டின் பகுதிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

கைவிடப்பட்ட பிறீவ் கேஸில் இந்தக் குண்டு இருந்தது.

இந்தக் குண்டைக் கண்டவர்களும் தகவல் கொடுத்தவர்களும் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக எவரும் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று தெகிவளைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி. என். பி. தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (உ-3)

## பரந்தன் வரையில் படை முன்னேற்றம்!

### அரசுத் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 28

ஆனையிறவுத் தளத்திலிருந்து தெற்குப் பக்கமாக— கிளிநொச்சியை நோக்கி— நேற்று முன்தினம் ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த ஸ்ரீலங்காப் படைகள் நேற்று பரந்தன் சந்திவரை முன்னேறியதாக ஸ்ரீலங்கா அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

முதல் நாள் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் —

முப்பத்தாறு படையினர் காயமுற்றதாகவும் —

விடுதலைப் புலிகள் தரப்பில் 42 பேர் கொல்லப்பட, நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் —

இலங்கை வானொலி அறிவித்தது.

டாங்கிகள், விமானப்படையின் யுத்த விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் விடுத

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு குறித்து மௌனம்

கொழும்பு, ஜுலை 28

முல்லைத்தீவுப் பகுதியில் இடம் பெறும் யுத்தம் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து அரசு சார்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் நேற்றுத் தகவல் ஏதும் வெளியிடவில்லை.

அப்பகுதியில் கடும் சண்டை நடைபெறுவதாகவும், முல்லைத்தீவு முகாமுக்குள் மீண்டும் நுழைந்த அரசுப்படைகள் முகாமிலிருக்கும் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் போன்றவற்றை அகற்றி துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் நேற்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பிரதேச மக்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்வு

கொழும்பு, ஜுலை 28

ஆனையிறவு முகாமிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கையை அடுத்து கிளிநொச்சிப் பகுதியிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த மக்களுடன் ஏற்கனவே யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் சுமார் ஒரு லட்சம் பேரும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலை அடுத்து கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஷெல் தாக்குதல்களினால், அங்கிருந்த மக்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் பேர ஊழலில் அரசியல்வாதியின் மகன்!

### குற்றம் சுமத்துகிறார் ஐ. தே. க. செயலாளர்

கொழும்பு, ஜுலை 28

'ஸ்ரீலங்காவின் யுத்தம் ஒரு புறம் தீவிரமாக நடக்க மறுபுறத்தில் அரசுத் தரப்பின் முக்கிய அரசியல்வாதி ஒருவர் ஆயுதக் கொள்வனவுப் பேரம் மூலம் ஊழல் புரிந்து பெரும் தொகைப் பணம் சம்பாதிக்கின்றார்.'

— இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலும் செய்தி நிறுவனங்களுக்குத் தகவல் வெளியிடுகையிலும் இக்குற்றச்சாட்டை அவர் வெளியிட்டார்.

அரசின் உயர்மட்டத்தின் உள்ளவர்களுடன் உறவுமுறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய தாக்குதல்களினால் தீர்வுத்திட்டம் பெரும் பின்னடைவு!

### புளொட் சித்தார்த்தன் கூறுகிறார்

லண்டன், ஜுலை 28

முல்லைத்தீவு, கிளிநொச்சி தாக்குதல்கள் காரணமாக அரசின் சமாதானத் தீர்வுத் திட்டத்துக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றே கருதுகிறேன்.

— இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்டின்) தலைவர் திரு. த. சித்தார்த்தன்.

பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

அரசின் சமாதானத் தீர்வுத் திட்டம், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் விவாதிக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்துக்கு வெளியே அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தனிப்பட்ட முறையில் பலருடன் பேசி வரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**பாடசாலைக் கட்டட, தளபாட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

''இக்ராட்'' டில் (ICTAD) பதிவு செய்து கொண்டுள்ள கட்டட வேலை ஒப்பந்தக்காரர்களையும், மரம் உருக்கு என்பவற்றினால் பாடசாலைத் தளபாடங்களைத் தயாரித்து வழங்கும் ஒப்பந்தக்காரர்களையும் உடனடியாக எம்மிடம் படிவத்தைப்பெற்றுப் பதிவு செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

கு. சிவபாலன்
பாடசாலை வேலைகள் பொறியியலாளர்
கல்விப் பணிப்பாளருக்காக,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
கற்பகப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
96 - 07 - 27 (சி-2679)



ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மணேநம.
வண்ணை குளங்கரை மருதடி

**ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**
(நாச்சிமார் கோயில்)

## தேர்த் திருவிழா
**விஞ்ஞாபனம்**

காலம்:- **29 - 07 - 96** திங்கட்கிழமை.
வசந்த மண்டபப் பூசை:- காலை **8 - 30** மணி.

அம்பாள் விநாயகர், முருகப் பெருமான் சமேதராகக் காலை 10 மணிக்கு ரதத்தில் ஆரோகணித்து அம்பிகை அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

அம்பிகை அடியார்கள் வந்து தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் பணிவுடன் வேண்டுகின்றோம்.

நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

— தர்மகர்த்தா சபை.
(42003)



## ST. JOHN'S COLLEGE,
JAFFNA.

க. பொ. த உயர்தர வகுப்பிற்கு (A/L - 1998 batch)) அனுமதி பெற விரும்பும் மாணவர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

விண்ணப்பங்கள் 01- 08 - 96 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்.
(சி-2680)



## பதவி வெற்றிடம்
**TYPIST CUM CLERK**

A/L படித்த ஆங்கில / தமிழ் தட்டெழுத்தில் பயிற்சியுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமது சொந்தக் கையெழுத்தில் **31 - 07 - 96** - க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
பரீட்சைப் பகுதி,

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
(41992)



21 ஆம் நாள்
**ஆத்மசாந்திப் பிரார்த்தனை**

## திருமதி யோகமலர் தியாகராசா

யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. தி. சர்வேஸ்வரனின் தாயார் திருமதி யோகமலர் தியாகராசா அவர்களின் மறைவினால் ஏற்பட்ட மன வேதனையை அவருடைய குடும்பத்துடன் பகிர்ந்து கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், சக ஆசிரியர்கள்,
(41969) மாணவர், பெற்றோர்.


## தரமுயர்வு

சாவகச்சேரி, ஜூலை 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு பெண்கள் பாடசாலையான சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் மகளிர் கல்லூரியாகத் தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை இப் பிரதேசத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளே கலை, விஞ்ஞான, வர்த்தக உயர் தர வகுப்புக்களைக் கொண்ட 1 ஏ பி. தரத்தில் உள்ள பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-31)

## வவுனியாவில் 35 பேர் கைது

தென்னிலங்கையில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த 35 பேர் வவுனியா எல்லையில் வைத்து கடந்த வியாழக்கிழமை விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பையடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் தாண்டிக்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ -3)

## வல்லையில் இனந்தெரியாத சடலம்

வல்லை பிரதான வீதி முனியப்பர் ஆலயத்திற்கு அண்மையாக இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்றுக் காலை காணப்பட்டது.

இச்சடலத்திற்கு அருகில் மீன்பிடி வலையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் கிடக்கக் காணப்பட்டன.

இறந்தவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை. சடலம் சாக்கினால் மூடப்பட்டுக் கிடந்தது. (உ-15)

## வங்கிக் கிளைகள் தொடர்ந்து ஒரே இடத்தில்

மானிப்பாய், காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளைகள் தொடர்ந்தும் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலயத்திலேயே இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரச வங்கிகள் யாழ்ப்பாணத்தில் செயல்படும் நேரம் குறித்து வங்கி வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9-30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வங்கி வாடிக்கையாளர்களுடைய கொடுக்கல் — வாங்கல்களை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## தோட்டச் செய்கைக்கு ம. எண்ணெய்

ஆயிரம் விவசாயிகள் தெரிவுத் திட்டத்தின் கீழ், துரித மரக்கறி உற்பத்திக்கெனக் கிராம சேவையாளர்கள் ஊடாக பதிவு செய்து கமநல சேவை நிலையத்தில் தமக்குரிய மண்எண்ணெயைப் பெற்றுக் கொள்ளாத வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தோட்டச் செய்கையாளர்கள், சம்பந்தப்பட்ட தமது கிராம சேவையாளர்களை உடன் சந்தித்து, பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்குரிய மண்எண்ணெய் பிரதேச செயலகம் மூலம் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (இ - 152)

## தவறுதலாக நடந்த சூடு! பொலீஸார் ஒருவர் பலி!!

### துப்பாக்கி நபர் தற்கொலை

கொழும்பு, ஜூலை 28

மெதிரிகிரிய — கொடபத்த பொலீஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை பொலீஸார் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவருக்கு அருகில் நின்ற மற்றொரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார்.

இதனால் பீதியுற்ற முதலாவது பொலீஸ்காரர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

'தினமின' சிங்கள நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது. (உ-10)

### நொத்தாரிஸ்மாரின்
## ஆவண இழப்புக் குறித்து விவரம் சேகரிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகள் இடம்பெயர்வுகளின் போது நொத்தாரிஸ்மார்கள் இழந்த ஆவணங்கள் பற்றிய விவரம் சேகரிக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் காணிப் பதிவக அதிகார எல்லைக்கு உட்பட்ட நொத்தாரிஸ்மார் தாங்கள் இழந்த ஆவணங்கள் பற்றிய விவரங்களையும் தங்களது தற்போதைய முகவரியையும் அறியத் தருமாறு—

யாழ் மாவட்ட காணிப் பதிவாளரும், மேலதிக பதிவாளருமான திரு என். சதாசிவ ஐயர் கேட்டுள்ளார். (அ-111)

## குத்தரிசி

சாவகச்சேரியில் உள்ள வர்த்தகத்திணைக்கள மக்கள் கடையில் இரண்டாம்கட்டமாக பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ வீதம் குத்தரிசி வழங்கப்படுகிறது.

ஒரு கிலோ அரிசியின் விலை 33 ரூபாவாகும்.

முதற்கட்டமாக பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ வீதம் குத்தரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்புத்துறைப் பகுதியில்
## மிதி வெடிகளில் சிக்குண்டு கால்நடைகள் இறக்கின்றன

கொழும்புத்துறை, ஜூலை 28

கொழும்புத்துறைப் பகுதியில் பாதுகாப்பு அரண்கள் அமைந்துள்ள சில பகுதிகளிலும், ஆலய வெளிவீதியிலும், தனியார் காணிகளிலும் மிதிவெடிகள் உள்ளதால் இப் பகுதிகளில் மேயச் செல்லும் ஆடு, மாடுகள் மிதிவெடிகளில் சிக்கி இறக்கின்றன.

இப்பகுதியில் அண்மைக் காலத்தில் இவ்வாறு சிக்குண்ட பதினைந்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் கால்கள் கழுத்து, வயிறு துண்டிக்கப்பட்டு இறந்துள்ளன: சில படுகாயமடைந்தன.

இதேவேளை, இராணுவப் பாதுகாப்புக் கருதி முட்கம்பி வேலி அடைத்து இருக்கும் சுற்றாடல் அரண் பகுதிகளில் கால்நடைகளை மேயவிடவேண்டாம் எனப் பாதுகாப்புப் படையினர் பொது மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். (அ-30)

## 100 ஆம் வயதில் அருட்சகோதரி

திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஒருவர் கடந்த மாதம் தமது நூறாவது அகவையில் காலடி வைத்தார்.

பாசையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தங்கியுள்ள அருட்சகோதரி எல். சூசன் கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி 99 ஆவது வயதை நிறைவு செய்தார்.

1897 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி பிறந்த இவருக்கு இறை ஆசி வேண்டி அவரது 99 ஆவது பிறந்த தினத்தில் திருப்பலிப் பூசை நடைபெற்றது.

அருட்சகோதரி சூசன் இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்தவர். (அ-173)


யா/ இராமநாதன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் **31 - 07 - 96** புதன்கிழமை பி. ப, **1-30** மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர் செயலாளர்
(42006)



## NEW SCIENCE COLLEGE
பருத்தித்துறை வீதி, குருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**98 A/L**

PHYSICS — திரு. குமரன்
CHEMISTRY — திரு. சிவத்திரன்
ZOOLOGY — திரு. கெங்காதரன்
PURE / APPLIED ] MATHS — திரு. கருணா

ஆரம்பம்:- **29-07-96**
திங்கள் 8-30 A.M (42004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறூண்டியில் இரத்தக்களரி மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்கு முயற்சி

## உகண்டா - தன்ஸானிய தலைவர்கள் சந்திப்பு

புறூண்டி, ஜூலை 28

மத்திய ஆபிரிக்க நாடான புறூண்டியில் மேலும் இரத்தக்களரியைத் தவிர்ப்பதற்காக அண்டை நாடுகளான உகண்டாவும், தன்ஸானியாவும் முயற்சிகளை மேற்கொள்கின்றன.

தன்ஸானியாவின் முன்னாள் ஜனாதிபதியும், சர்வதேச மத்தியஸ்தருமான ஜூலியஸ் நிரேரே மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

புறூண்டியில் பெரும்பான்மை ஹூட்டு இன ஜனாதிபதி சில்வஸ்திரா நிதிகன்னியாவின் ஆட்சி இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டு இரண்டு நாள்களின் பின்னர் அண்டை நாடுகளால் சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை ருட்சி இனத்தைச் சேர்ந்தவரான பியரே புவாரோ என்பவர் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளார்.

சிறுபான்மை ருட்சி இனத்தைச் சேர்ந்த 300க்கும் அதிகமான ஆண்கள் — பெண்கள் — குழந்தைகள் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்களால் சமீபத்தில் படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே புறூண்டியில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஹூட்டு ஜனாதிபதி சில்வஸ்திரா நிதிகன்னியா பதவி கவிழ்க்கப்பட்டார்.

அண்டை நாடான றுவாண்டாவைப் போன்று புறூண்டியிலும் சிறுபான்மையினரான ருட்சி இனத்தவரே நாட்டின் ராணுவ அரசியல் துறைகளிலும் பொருளாதாரத் துறையிலும் மேல்நோக்கி நிற்கின்றனர்.

புறூண்டி நாட்டு மக்களின் 85 சத வீதமானவர்கள் ஹூட்டு இனத்தவர்கள்.

இதனாலேயே புறூண்டி நாடும் றுவாண்டா போல் பயங்கர இனக் கலவரத்தை சந்திக்கலாம் என அஞ்சப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் றுவாண்டாவில் இடம் பெற்ற இனக் கலவரத்தில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

புறூண்டி ஆட்சிக்கவிழ்ப்பை ஐ. நா. உட்பட பல உலக நாடுகள் கண்டித்துள்ளன.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் பியரேபுவாரோ புறூண்டியில் ஜனநாயகத்தை நிலை நாட்டப் போவதாகக் கூறியுள்ளார்.

ருட்சி சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையும் அங்கு ஆரம்பமாகியிருக்கிறது.

வன்செயல் சம்பவங்களை கண்டித்தால் ஹூட்டுகிளர்ச்சி வாதிகளுடன் பேச்சு நடத்த தாம் விரும்புவதாக புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நைரோபியில் உள்ள ஹூட்டு கிளர்ச்சிக் குழு இத் திட்டத்தை நிராகரித்துள்ளது.

கெரில்லா யுத்தத்தைத் தொடர்ந்தும் தீவிரப்படுத்தப் போவதாக அது கூறி உள்ளது–

ருட்சிகளின் தலைமயிலான இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றியதைத்தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச்சபை நேற்றுமுன்தினம் நிச்சயமற்ற நிலையில் கூடி இருந்தது.

புறூண்டியில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கப் போவதாகப்புதிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5-3)

**உலக அரங்கில்**

## ஈராக் ஜனாதிபதி ஹூசெய்னைக் கொல்ல முயற்சி

ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹூசெய்னைக் கொலை செய்யும் முயற்சி ஒன்று தோல்வி கண்டுள்ளது.

பாக்தாத்தில் அவரின் வாசஸ்தலத்துக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று அவர் வெளியே புறப்பட்டு 5 நிமிடத்தின் பின்னர் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சுமார் 300 ஈராக் ராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1990 — 91 வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் ஜனாதிபதியைக் கொலை செய்ய மேற்கொண்ட முயற்சிகளில் இது மிகவும் மோசமானது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பங்களாதேஷ்: 14 வள்ளங்கள் கடலில் மூழ்கின

டாக்கா, ஜூலை 28

பங்களாதேஷில் 14 மீன்பிடி வள்ளங்கள் கடலில் மூழ்கியதால் 44 மீனவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வியாழக்கிழமை நான்கு வள்ளங்களும், வெள்ளிக்கிழமை பத்து வள்ளங்களும் கடலில் மூழ்கின. (இ)

## 3,300 கருக்களை அழிக்க நடவடிக்கை

### உபயோக காலம் காலாவதி

லண்டன், ஜூலை 28

பிரிட்டனில் உள்ள பல மருத்துவ மனைகளில் உள்ள குளிர் சாதனப் பெட்டிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டுவந்த மூவாயிரத்து 300 மனித சிசுக்களுக்கான கருக்களின் உபயோக காலம் காலாவதியாவதனால், இம்மாத இறுதிக்குள் அவை அழிக்கப்பட விருக்கின்றன.

இவற்றை அழிக்க வேண்டாம் என்றும்—

இத்தாலி நாட்டில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் அந்தக் கருக்களை ஏற்று குழந்தைகளைப் பெற்றெடுக்க முன் வந்துள்ளனர் என்றும் சிசுக்கொலை எதிர்ப்புக்குழு ஒன்று பிரிட்டிஷ் அரசுக்கு அறிவித்துள்ளது. (இ-3)

## இந்தோனேசிய பெண்ணை இம்சைப்படுத்தினாராம்

### சிங்கப்பூர் பெண் மீது விசாரணை

சிங்கப்பூர் ஜூலை 28

சிங்கப்பூர் நாட்டுப் பெண் ஒருவர் தனது வீட்டில் வேலை செய்து வந்த இந்தோனேசிய பெண் ஒருவரை இரும்பால் அடித்து அவரது முகத்தில் கொதிக்கும் நீரை ஊற்றி, தொடையில் கிள்ளிக் காயப்படுத்தினாராம்.

இது தொடர்பாக நடந்த வழக்கு விசாரணையில் அப் பெண் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இவருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனத் தெரிகிறது. (இ-3)

## மேற்குக் கரையுடனான எல்லையை இஸ்ரேல் ராணுவம் மீண்டும் மூடியது

ஜெருசலத்துக்கு அருகே இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதையடுத்து இஸ்ரேலிய இராணுவம் மேற்குக் கரைப்பகுதியுடனான எல்லையை மீண்டும் மூடியுள்ளது.

இதனால் பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வேலை செய்வதற்கு இஸ்ரேலுக்கு வருவது தடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தொழில் நிமித்தம் இஸ்ரேலுக்குள் வந்தவர்கள் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர்.

பலஸ்தீனரின் தலைவர் யசீர் அரபாத் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ளார்.

இருதரப்பினருக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையை அது மீறுகிறது என அவர் கூறினார்.

நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றிலேயே இரு இஸ்ரேலர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணம் செய்த வாகனம் மீது பலஸ்தீனர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் பின்னர் மேற்கு கரைப்பகுதிக்குள் தப்பிச் சென்றனர் எனக் கூறப்படுகிறது. மேற்குக் கரை பலஸ்தீன சுயாட்சிக்கு உட்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

## மயிலிட்டி மார்பு நோய் ஆஸ்பத்திரி சாவகச்சேரியில் இயங்குகிறது

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை நேற்று முன்தினம் முதல் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் இயங்குகின்றது.

ஆண் — பெண் நோயாளர்கள் இங்குள்ள வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மயிலிட்டி மார்பு நோய் ஆஸ்பத்திரி மூடப்பட்ட பின்னர் ஆண்கள் கோப்பாய் ஆஸ்பத்திரியிலும், பெண்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்று வந்தனர்.

கடந்த அக்டோபர் மாதம் தொடக்கம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை இயங்கி வந்ததால் பெண்கள் வார்ட் மூடப்பட்டிருந்தது.

பெண்கள் மார்பு சிகிச்சை வார்ட் நோயாளர்கள் பழைய இடத்திலும் ஆண்கள் மார்பு சிகிச்சை வார்ட் நோயாளர்கள் புதிய கட்டடமொன்றிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மார்பு நோயாளிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோதிலும், மயிலிட்டி மார்பு நோய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய ஊழியர்கள் இங்கு கடமைக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த மூன்று மாதங்களாக ஊழியர் பற்றாக்குறையாக உள்ள வேளையில் தற்போது ஆரம்பிக்கப்பட்ட மார்பு நோய் ஆஸ்பத்திரி கடமைகளைச் செய்வதில் சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஊழியர்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆம் ஆண்டு நிறைவு

### முத்திரையும் வெளியிடப்படும்

யாழ். மத்திய கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரியின் ஸ்தாபகர் வண. கலாநிதி பீற்றர் பேசுவல் ஞாபகார்த்தமாக எதிர் வரும் முதலாம் திகதி கொழும்பில் இரண்டு ரூபா பெறுமதியான முத்திரையும், முதல் நாள் உறையும் வெளியிடப்பட உள்ளன.

அதே சமயம் யாழ். மத்திய கல்லூரியின் 180ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 1 ஆம் திகதி காலை 10 மணிக்கு மத்திய கல்லூரியின் தம்பர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வண. கலாநிதி பேசுவல் ஞாபகார்த்த முத்திரையை அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலும் வெளியிட பழைய மாணவர் சங்கம் முயற்சிகளை எடுத்து வருகிறது. (இ)

## தமிழ்மொழிக் கல்வியில் கடந்த காலங்களில் அநீதி

### அமைச்சர் ஒப்புக் கொள்கிறார்

கொழும்பு, ஜூலை 28

தமிழ் மொழிக் கல்வி விடயத்தில் கடந்த காலத்தில் அநீதிகள் இழைக்கப்பட்டிருந்தால் அதற்குப் பரிகாரம் காண்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரான நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

யார் குண்டுகளை வீசினாலும் தான் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களின் அலுவல்களைக் கவனிக்க விருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மலத்தியோன் விசிறப்படுகிறது

பளைப் பிரதேசத்தில் மலேரியாக்காய்ச்சல் அதிகமாகக் காணப்பட்ட கிராமங்களில் சுகாதாரப் பகுதியினரால் மலத்தியோன் விசிறப்படுகிறது.

இவ் வருட ஆரம்பத்தில் நூற்றுக் கணக்கானோர் இப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

வடமராட்சி, ஜூலை28

கெருடாவிலில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் சில மாதங்களாக இந்த வைத்தியசாலை செயற்படாதிருந்தது.

பருத்தித்துறை பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் இவ் வைத்தியசாலை திங்கள். புதன், சனிக்கிழமைகளில் இயங்கி வருகிறது. (இ173)

## கிருமி நாசனி தட்டுப்பாடு

அச்சுவேலி, ஜூலை 28

பயிர்களுக்கு தெளிப்பதற்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசனிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ். குடாநாட்டில் பரவலாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கிருமிநாசனிகளின் தேவை அதிகரித்துள்ளது. (இ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிக மலிவான விலையில் புதிய பனை மரங்கள், சிலாகைகள், கை மரங்கள், வளைகள் விற்பனைக்குண்டு. கிடைக்குமிடம்: சாந்தகுமார், 14/1, கண்டி வீதி, பெண்டிக்கோஸ்ட் சபை அருகே, யாழ்ப்பாணம். (41964)

எம்மிடம் மலிவு விலையில் பட்டசில்க், பிளேன் சலஞ்சர். பப்பிராகலெக்சன், பல்வகைப்பட்ட சேட்டிங் வகைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு வேலைநாட்களில் — யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (சி – 2670)

தேங்காய் சிரட்டை விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். மல்ரி – ஒயில் மில், K. K. S. வீதி, இணுவில். (41961)

நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலா ஸ்ரோர்ஸ், சரசாலை றோட், மட்டுவில். (41986)

## தேவை

அச்சகத்தில் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர் தேவை. நேரில் வரவும். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (41932)

நல்ல தரமான வேப்பம் விதை வைத்திருப்பவர்கள் எமது மில்லில் கொடுத்து நியாயமான விலையினை பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: மல்ரி ஒயில் மில், K. K. S வீதி, இணுவில். (41960)

## கணிதம்

ஆண்டு 7 முதல் G. C. E. (O/L) வரை மாணவர்களுக்கு திறமைமிக்க ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ, சிறு குழுக்களாகவோ கணிதம் கற்பிக்கப்படும். O/L மாணவர்களுக்கு கடந்த கால வினாக்களும் மீட்டல் வகுப்பில் பூர்த்தியாக்கப்படும். தொடர்பு: புதிய இல: 192, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41971)

## மாதிரிப் பரீட்சை

ஆண்டு 5 (1996) புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய மாதிரிப் பரீட்சைக்கான வினாத்தாள் (7 ஆவது) 28 – 07 - 96 ஞாயிறு வெளிவிடப்படும். தொடர்பு: புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (41963)

## உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் வைற்கவுஸ் அருகில் 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

## மணமகன் தேவை

வேளாள குலத்தைச்சேர்ந்த 27 வயதான கிறிஸ்தவ ஆசிரியைக்கு தீய பழக்கமற்ற, அரச தொழில் புரியும் மணமகன் தேவை. சமயம் கவனிக்கப் படமாட்டாது. தொடர்பு இல:- 505. மே/பா உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (41919)

## O/L கணிதம்

Distinction; Credit பெறுபேறடைய இதுவரையும் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41997)

## தவறிவிட்டது

இராசேந்திரன் கிரிதரன் ஆகிய எனது 712190612 V இலக்க அடையாள அட்டை யாழ். ஆஸ்பத்திரிக்கும், இராமநாதன் றோட்டிற்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 91, இராமநாதன் வீதி, துர்க்கா களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41981)

எனது 457234759 V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் பத்மாவதி சின்னராஜா, 70/6, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (41918)

அப்பாத்துரை ரமேஸ் ஆகிய எனது பல்கலைக்கழக பதிவேடு 24 - 07 - 96 இல் யாழ். பல்கலைக்கழகத்திற்கும், சோமசுந்தரம் அவனியு சுண்டிக்குளிக்கும், இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுப்பவர்கள் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளித்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (41979)

## ஆங்கிலம்

Spoken இருமாதங்களில், G. A. Q, O/L Distinction, Credit பெறுபேறடைய BSc London Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோயிலடி திருநெல்வேலி. (41996)

## புலமைப் பரிசில் 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. அடுத்த (10வது) வெளியீடு 28-7-96 Bond Institute 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (41989)

## சேவை வழங்கல்

சகல விதமான மொழி பெயர்ப்புகளும், ஆங்கில தட்டெழுத்து வேலையும் எந்நேரமும் செய்து கொடுக்கப்படும். ப. தெய்வேந்திரன், அனுமதி பெற்ற மொழி பெயர்ப்பாளர், 408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (41978)

## வாங்கப்படும்

பழைய நாவல் புத்தகங்களும், புராணப் புத்தகங்களும் நியாய விலையில் வாங்கப்படும். தொடர்பு: பாலா ஸ்ரோர்ஸ், சரசாலை றோட், மட்டுவில். (41987)

## A/L மாதிரி பயிற்சிகள்

கணித, உயிரியல், கலை, வர்த்தக, பிரிவுகளுக்கான எல்லா பாடங்களுக்குமான மாதிரி பயிற்சி வினாத்தாள்களை 1-8-96 முதல் பெற்றுக் கொள்ளலாம். Bond Institute 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (41991)

## புலமைப் பரிசில் 95

14-7-96 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட பரீட்சை வினாத்தாள்களை எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond, யாழ்ப்பாணம். (41990)

---

## நல்லூர் பிரதேசத்தில்

விடியும் வேளை

## "உதயன்"

நாளிதழை வீடுகளில் பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்க:

**ஏ.எம்.ஆர். ஸ்தாபனம்,**
186, கோயில் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

---

## றோயல் அக்கடமி

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

**ஆண்டு 6 முதல் O/L வரை**

- ★ கணிதம் — திரு. K. லோகநாதன், திரு. S. சிறிதரன்
- ★ விஞ்ஞானம் — திரு. K. குணசீலன், திரு. S. மனோ
- ★ தமிழ் — திரு. K. தர்மராஜா, திரு. S. சுதாகரன்
- ★ சமூகக்கல்வி - திரு. V. நாகநாதன், திரு. M.சிறிபாஸ்கரன்
- ★ ஆங்கிலம் — திரு. T. சிவானந்தச்செல்வம். திரு. S. நரேந்திரன்
- ★ சமயம் — திரு. M. குபேந்திரன்

வகுப்புகள் நடைபெறுகின்றன.

**6 ஆம் ஆண்டு புதிய வகுப்பு ஆரம்பம்**

- ● சமயபாட ஆசிரியர்
- ● கிராமசேவை உத்தியோகத்தர்
- ● சுகாதார அமைச்சு உத்தியோகத்தர்

பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை வகுப்பு

ஆரம்பம் **30-07-96** செவ்வாய்
(காலை 11 மணி, புதிய நேரம்)

பொது அறிவு — திரு. வே தவேந்திரன் B, com
நிர்வாகி

(41947)

---

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

## THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

**A|L 97, 98**

**G. A. Q, B. A** வகுப்புகள்

தமிழ் — மீரா
இந்து நாகரிகம், இந்து சமயம் ] — சிவமகாலிங்கம்

**Spoken English**
**With**
**Grammar**
**Short Hand and Typing**

ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிற்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: **01 – 08 – 96**

இயக்குநர்
இ. லோகநாயகி

(41999)

---

## CHUNDIKULI GIRLS' COLLEGE

JAFFNA

## POSTS VACANT

Post of Principal and Vice-Principal

Applicant should be graduates, preferably with post graduate diploma and more than ten years teaching experience.

Apply before **31** st August **1996** to the

**Secretary, Governing Body of CMS Schools Ladies' College, Colombo 7.**

**Dr. E. S. Thevasagayam**
**Chairman**

(2678)

---

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**OL 1996 - DEC**

ஆண்டுகள்: **9, 10**

2 ஆவது புதிய பிரிவு
ஆரம்பம்:- **01-08-1996** வியாழன் 3 மணி

இன்று யாழ். நகரில் மிகப் பிரபலம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒன்றிணைந்த சேவை.

| | |
|---|---|
| கணிதம் :- | திரு. B. கிருபாகரன் |
| விஞ்ஞானம் :- | திரு. P. தயாநிதி, திரு. T.S குணாளன் |
| வரலாறும் சமூகக்கல்வியும் :- | திரு. K.S. முத்துலிங்கம் |
| தமிழ் :- | திரு. திருஞானம், திரு. W. ஜெயபால் |
| ஆங்கிலம் :- | திரு, E. ஆசிர்வாதம் |
| வர்த்தகம் :- | திரு. E. ஜீவா |

★ விரும்பிய பாடங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப் படும்.

★ அனுமதிகளை 01 - 08 - 96- க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

(41962)

---

## ஓராண்டு நினைவலைகள்

வையத்துள் அறிமுகம்: 19 — 10 — 1935



தெய்வத்துள் சங்கமம்: 08 — 08 — 1995

திதி: 28—07—1996

அமரர்

## தம்பிராஜா கனகரட்ணராஜா

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவானது எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது ஐயா.

உங்கள் பிரிவால் துயருறும்:
பாசமுள்ள மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

சந்தையடி,
மானிப்பாய்.

(41980)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## புதிதாக ஓர் உயிர்க்கொல்லியா?

மனிதர்கள் உட்கொள்ளும் உணவு நச்சுத் தன்மை அடைந்து அது மற்றவர்களுக்குப் பரவும் தொற்று நோயாக மாறும் புதிய உயிர்க் கொல்லி வியாதி குறித்துச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுடன் விஞ்ஞான மற்றும் கைத்தொழில் துறைகளில் போட்டி போட்டு முன்னேறி வரும் ஜப்பானில் இந்த நோய் இனங்காணப்பட்டுள்ளது.

உணவில் நஞ்சூட்டப்படுவதால் அதனை உட்கொள்வோர் உடலில் நஞ்சேறி உயிராபத்துக்கு ஆளாவது வழக்கமானது. ஆனால் சாதாரண உணவு உட்கொள்வோர் அது நஞ்சாக மாறுவதால் உயிராபத்துக்கு ஆளாகும் சம்பவங்கள் அங்கொன்று இங்கு ஒன்றாகவே நடப்பது உண்டு.

உட்கொள்ளும் உணவு நஞ்சாவதால் உண்டாகும் உயிராபத்து ஒரு தொற்று நோயாக பெரும் எண்ணிக்கையானோருக்குப் பரவுவது என்பது பேராபத்துக்கு உரியதாகும்.

தொற்று நோய்கள் ஒருவரிலிருந்து மற்றவருக்கு காற்று அல்லது தண்ணீர் மூலமே பெரும்பாலும் பரவுவது உண்டு. மலேரியா போன்ற நோய்கள் இரத்தத்தின் மூலமும் தொற்றுகின்றன, வைரசுகள் எனப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளே தொற்று நோய்களை ஆளுக்கு ஆள் காவுகின்றன.

உணவு மூலம் தொற்று நோய் உண்டாகிறது என்றால், எயிட்ஸ் போன்ற ஒரு புதிய நோய் உருவாகிறதோ என்ற அச்சம் தோன்றுகிறது.

மக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருள்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பசளை, கிருமி நாசனி போன்ற இரசாயனப் பொருள்கள் நஞ்சாக மாறுவதே இத்தகைய ஒரு புதிய வியாதிக்கு மூல காரணமாக அமையக்கூடும். இது ஆராய்ச்சிக்குரியதாகும்.

நவீன விவசாயம் என்ற பெயரில், உற்பத்தியை, அறுவடையை, அதிகரிக்கும் நோக்குடன் சகல பயிர்ச் செய்கைகளுக்கும் இரசாயனப் பசளையும், கிருமி நாசனியும் இப்போது கட்டாயமாகி விட்டன.

இதனால் விளைபொருள்கள் ஏதோ ஒரு வீதாசாரத்தால் நஞ்சூறியவையாக அமைகின்றன. இந்த நஞ்சு உடனிருந்து கொல்லும் எமனாக மாறும் என்று பல துறையினரும் நீண்ட காலமாக அச்சம் தெரிவித்து வந்தனர். அது இப்போது மெய்யாகிவிட்டது.

தெரியாமல் இருந்து மெதுமெதுவாகக் கொல்லும் புற்று நோய், எயிட்ஸ் வரிசையில் இந்த உணவு நஞ்சுத் தொற்று நோயும் சேர்ந்து கொள்வது அதனையே உறுதி செய்கிறது.

விவசாய நிலங்கள் அணுக் கதிர் வீச்சுக்களினால் மட்டுமன்றி போராயுதங்களின் இரசாயன நச்சுக்களினாலும் பாதிக்கப்படுவது உண்டு.

ஆகையால், இலங்கை போன்ற நாடுகளிலும் புதிய விவசாய முறைகள், போராயுதங்கள் என்பவற்றின் தாக்கங்கள் புதிய உயிர்க் கொல்லி நோயைக் கொண்டுவரும் அபாயம் இல்லாமல் இல்லை.

# அகதிகளை மீளக் குடியேற்றுவதே வன்னி ராணுவ நடவடிக்கை நோக்கம்

### பி. பி. ஸிக்கு இலங்கைப் பிரதித்தூதர் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 28

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தற்போது வன்னியில் அகதி முகாம்களில் வாழும் மக்களை யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேற்றுவதே வன்னியில் தற்போது இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஆகும்

பிரிட்டனுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர் ஜி. எஸ். முனசிங்க பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையினால் மூன்று லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் இதற்கான பொறுப்பை அரசு ஏற்குமா?

—என்றகேள்விக்கு பதில்அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மற்றும் கேள்வி — பதில்கள் வருமாறு:-

கேள்வி:- தெகிவளையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்தா கிளிநொசசி மீதான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது?

பதில்:- நான் அப்படி நினைக்கவில்லை. இராணுவத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக கிளிநொச்சி மீதான தாக்குதல் அமையும் எனப் பொதுவில் எதிர்பார்க்கப்பட்டது.

கேள்வி:- அரசின் இறுதியான மூலோபாயம் என்ன? விடுதலைப் புலிகளை கிளிநொச்சி உட்பட முழுப்பகுதிகளிலும் முற்றிலுமாக அழிப்பதா?

பதில்:- விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராத வரை அரசின் மூலோபாயம் அதுவாக இருக்கலாம்.

கேள்வி:- பேச்சுக்கான வாய்ப்புக்கள் உண்டா?

பதில்:- அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பார்க்கும் போது ஜனநாயக நீரோட்டத்தில் அவர்கள் கலப்பார்கள் என கூறமுடியாது. (இ-10)

### "இந்து" நாளிதழ் உட்பட

## 3 வெளிநாட்டுத் தினசரிகள் நேற்று விற்பனைக்கு தடை

நேற்று கொழும்புக்கு வந்திறங்கிய — சென்னையின் ''இந்து'' நாளேடு உட்பட— மூன்று வெளிநாட்டுத் தினசரிகளை புழக்கத்துக்கு விட சுங்க அதிகாரிகள் மறுத்துவிட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தினசரிகளில் முல்லைத்தீவு பற்றிய போர்ச் செய்திகள் இடம் பெற்றிருந்ததே இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

போர்முனைத் தகவல்கள் பற்றிய செய்திகளுக்கு ஸ்ரீலங்கா அரசு தணிக்கை விதித்திருப்பது தெரிந்ததே எனினும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள், வெளிநாட்டுப் பத்திரிகைகள், வெளிநாட்டு வானொலிகள் — தொலைக் காட்சிகள் போன்ற வெளிநாட்டு வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு இத் தணிக்கை செல்லுபடியற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் அத்தகைய தணிக்கையை மீறிய செய்திகளைத் தாங்கி வரும் வெளிநாட்டுப் பத்திரிகைகளை நாட்டுக்குள் விநியோகத்துக்கு விடுவதைத் தடுக்கும் நடவடிக்கையாகவே மேற்படி மூன்று பத்திரிகைகளுக்கும் விமான நிலையத்தில் வைத்தே விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

### றாகமவில் 4 தமிழர் கைது

கொழும்பு, ஜூலை 28

றாகம ரயில் நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

றாகம பொலீஸ் அதிகாரிகள், பேலியகொட செயற்பாட்டு நிலைய அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் ஒன்றிணைந்து இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## வதந்தி பரப்பிய 15 நபர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 28

வதந்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டின் பேரில் பொலீஸார் 15 பேரைக் கைது செய்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் நான்கு பேர் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வதந்தி பரப்புவோரைக் கண்டுபிடிக்க விசேட பொலீஸ் பிரிவு ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (உ-5)

### சிறுமி மரணம்

யாழ்பாணம், ஜூலை 28

செப்ரிசீமியா நோயினால் பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் சிறுமி ஒருவர் உயிரிழந்தார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பேரின்பநாதன் பாமினி (வயது-10) என்ற சிறுமியே மரணமானவராவார். (உ-15)

## தமிழர்கள் மீளக்குடியேற கிழக்கில் அனுமதி மறுப்பு

### கூட்டணி எம். பி. கண்டனம்

கொழும்பு, ஜூலை 28

''திருமலையில் தமிழ் — முஸ்லிம் மக்கள் குடியேறுவதாயின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று காரணம் காட்டி அவர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள்; சிங்கள மக்கள் குடியேறுவதென்றால் அதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது.''

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருகோணமலை மாவட்ட எம். பியான திரு. அ. தங்கத்துரை கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் பேசும் போது மேற்கண்டவாறு, கண்டனம் தெரிவித்தார். (உ- 3)

# ஒரு ரூபா 50 சதத்தால் மாவின் விலை உயர்வு

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை நேற்று முன்தினம் இரவு முதல் ஒரு ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாவின் புதிய விலை 13 ரூபா 50 சதமாகும்.

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை அதிகரித்திருப்பதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் கோதுமை மாவின் விலை 187 டொலராக இருந்தது.

தற்பொழுது 291 டொலர்களாக அது உயர்ந்து விட்டது என்று உணவுத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஒரு கிலோ கோதுமை மாவைக் கொள்வனவு செய்ய அரசு 21 ரூபாவை செலவிட வேண்டியிருக்கிறது.

பொதுமக்களுக்கு இதை மானிய விலைக்கு விற்பதனால் அரசாங்கத்துக்கு ஒரு கிலோவுக்கு 9 ரூபா நஷ்டம் ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உணவுத் திணைக்களம் தமது பேக்கறியில் தயாரிக்கும் பாணை 5 ரூபா 75 சதத்துக்கு விற்கும்.

இதேவேளை—

உருளைக்கிழங்கு, வெங்காயம், செத்தல் மிளகாய் தொடர்பான மொத்த விற்பனை விலையை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (அ-30)

★ ★ ★

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி (முருகமூர்த்தி) கோயில் தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு வசந்தமண்டபப்பூசையை அடுத்து நடைபெறும். (அ-30)

★ ★ ★

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட துர்க்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த தீமிதித்தல் நிகழ்வு நாளை திங்கட் கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும்

★ ★ ★

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ரதோற்சவம் நாளை 29-7-96 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அம்பாள் தீர்த்தத் திருவிழா மறுநாள் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடிப் பூரணையன்று இடம்பெறும். (அ-30)

★ ★ ★

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி அருள்மிகு ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில்இன்று பகல் வசந்தோற்சவத் திருவிழா நடைபெறுகிறது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். காலை ஏழு மணிக்கு வைரவப் பெருமான் ஊறணி சமுத்திரத்துக்கு தீர்த்தமாடப் புறப்படுவார். (அ)

### ஞாயிறு விடுமுறை

சாவகச்சேரி வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிகர் நிலையங்கள் இன்று ஞாயிறு முதல் பிரதி ஞாயிறுதோறும் விடுமுறைக்காக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய வணிகநிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்களின் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் பொருட்டு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (31-117)

### யாழ். பல்கலைக்கழக

## கலைப்பீட பரீட்சைகள் 12 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

முதற்கலை, முதல் வர்த்தகம், முதல் முகாமைத்துவம், முதல் சங்கீதம், முதல் நடனம் மற்றும் முதல்வருட சங்கீதம், நடனம், வயலின், வீணை டிப்ளோமா பரீட்சைகள் அன்று ஆரம்பமாகவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பரீட்சையை தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் வருட கலைப் பரீட்சைகளும் இறுதியாண்டுப் பரீட்சை எழுதத் தவறவிட்ட மாணவர்களுக்கான சிறப்புப் பரீட்சைகளும் இடம்பெறவுள்ளன

போக்குவரத்து, மற்றும் பிற காரணங்களால் பல்கலைக்கழகத்துக்கு இதுவரை வந்து சேராத மாணவர்களுக்கு சிறிதுகால இடைவெளியின் பின்னர் சிறப்பு பரீட்சைகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (உ-3)

### தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையம்

கல்வி வலயம் இரண்டின் வலிகாமம் பகுதிக்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் செயற்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் முன்பு செயற்பட்டு வந்த 10 நிலையங்களும் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு தற்பொழுது மூன்று நிலையங்கள் மட்டும் செயற்படுகின்றன.

கல்வி வலயம் ஒன்றுக்கான பயிற்சி நிலையம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும்—

கல்வி வலயம் இரண்டுக்கான பயிற்சி நிலையங்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி ஆகியவற்றிலும் செயற்படுகின்றன. (இ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகப்பேற்று விடுதி இடம் மாறும்

யாழ்.போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று விடுதி (22ஆம் இலக்க வார்ட் அடுத்தசில தினங்களில் தற்போது இயங்கும் இடத்திலிருந்து வைத்தியசாலையின் முன் பகுதிக்கு மாற்றப்படும்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இவ்விடுதி தற்போது இயங்கும் இடத்திலிருந்து முன்பகுதிக்கு மாற்றப்படவிருப்பதாக யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-4)

### ஒலிம்பிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான பொருள் ஒன்றை அடையாளம் கண்டதாகவும்—

அதைத் தொடர்ந்து குண்டு செயல் இழக்கச் செய்யும் பிரிவினருக்கு அவசர அழைப்பு அனுப்பி விட்டு, அப்பகுதியிலிருந்த பொதுமக்களை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலீஸார் முயற்சிக்கையில் அப்பொருள் வெடித்ததாகவும்—

பல்வேறு செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட தகவல்களில் இருந்து தெரியவருகின்றது.

குண்டு வெடித்த இடத்தில் மூன்றடி ஆழத்துக்கு பெரும் குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

பைஒன்றுக்குள் இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. அது நாட்டு வெடிகுண்டாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறும் அனைத்து அரங்குகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறும் என ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

நேற்றைய விளையாட்டு நிகழ்வுகள் ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது; பல்வேறு நாட்டுக் கொடிகளும் நேற்று அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன. (உ-3-5-10)

# ஜே. ஆர் காலத்தைவிட தற்போது கடும் செய்தித் தணிக்கை அமுல்!

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் காலத்தையும் விட கடுமையான

## "சண்டே லீடர்" ஆசிரியர் விவரிப்பு

செய்தித் தணிக்கை முறை தற்போது அமுல் செய்யப்படுகின்றது.

''சண்டே லீடர்'' ஆங்கில வார இதழின் ஆசிரியர் லசந்தா விக்கிரமதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். தற்போதைய செய்தித் தணிக்கை முறை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

''ஸ்ரீலங்காவில் போர் தொடர்பான செய்திக் தணிக்கை ஏழைப் பொது மக்களுக்கு மாத்திரமே உரியது யுத்தம் தொடர்பான தகவல்கள் மாத்திரமன்றி கோடிக்கணக்கான பொது நிதியையும் ஆயிரக்கணக்கான உயிர்களையும் பலி கொண்டுள்ள யுத்தத்தில் இறக்கும் மக்களைப்பற்றியோ மோசடி செய்யப்படும் பொது நிதி பற்றியோ மக்கள் எதையும் அறிய முடியாதுள்ளது.

''பணம் படைத்தவர்களுக்கும், விடயம் தெரிந்தவர்களுக்கும் பி. பி. ஸியின் ஆங்கிலச் செய்திகளைக் கேட்டு விளங்கக் கூடியவர்களுக்கும் ஓரளவிற்குத் தகவல்களை அறியும் வாய்ப்பு உள்ளது.

''இருப்பினும் இந்நாட்டில் பி. பி. ஸி. தொலைக்காட்சி ஒளிபரப்பின்போதும், சி.என். என் ஒளிபரப்பின்போதும் ஸ்ரீலங்கா யுத்தம் தொடர்பான செய்திகள் ஒளிபரப்பு படும்போது குறித்த செய்தி இடைநிறுத்தி இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

''சிறிலங்காவிலுள்ள செய்தித்துறையாளர்களுக்கு தொடர்ந்தும் யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

''முல்லைத்தீவில் இடம் பெற்ற அழிவுபற்றியோ, யுத்தம் தொடர்பான வேறு சம்பவங்கள் பற்றியோ பொது மக்களுக்கு செய்தி வெளியிட எங்களால் முடியாது.''

''நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வெளியிடும் கருத்துக்களுக்கு மட்டும் தணிக்கை எதுவுமில்லை.

''யுத்தத்துடன் தொடர்புடைய சில அரசியல்வாதிகளின் வருமானம் அல்லது சொத்துக்களின் பெறுமதி திடீரென அதிகரித்துள்ளது என எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன, இவ்வாறான தகவல்களை பத்திரிகைகளில் எழுதி மக்களுக்குத் தெரிவிக்க எங்களுக்கு வாய்ப்பு இல்லை. அதுதான் மிகவும் துக்கமான விடயம் — அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை சம்பந்தமான வர்த்தகமானி விதிகளின்படி எமக்கு அவ்வாறான வாய்ப்பு இல்லை.

முன்னைய அரசின் காலத்தில் கூட — அதாவது 1988 க்கு முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் கூட இவ்வாறான பத்திரிகைத் தணிக்கை இரண்டு அல்லது மூன்று சந்தர்ப்பங்களில் விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போதுள்ளது போன்ற கடினமான விதிமுறைகள் இருக்கவில்லை. உதாரணத்திற்கு அமைச்சர் ஒருவர் அல்லது அவருக்கு நெருக்கமானவர் ஒருவர் ஆயுதக் கொள்வனவில் மோசடி செய்தார் என எடுத்துக் கொண்டாலும் யுத்தம் தொடர்பான தணிக்கையின் கீழ் எம்மால் இது பற்றி பத்திரிகையில் எழுத முடியாது. — என்றார். (உ-10)

### பரந்தன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளை எதிர்த்துக் கடும் சண்டையிட்ட பின்னர் பரந்தன் பகுதியைப் படைகள் கைப்பற்றியதாகவும்' இலங்கை வானொலி தகவல் வெளியிட்டது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் படையினர் வசம் வந்திருப்பதாகவும் அது குறிப்பிட்டது.

ஆனையிறவின் மேற்குக் கரையிலிருந்து டாங்கிப் படை ஒன்று பரந்தனை நோக்கி முன்னேறியதாகவும் —

தரைப் படைப் பிரிவு ஒன்று தெற்கு நோக்கி முன்னேறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குத் தெற்கே — பிரதான வீதிக்குக் குறுக்காக — சுமார் நானூறு யார் விஸ்தீரணத்துக்கு விடுதலைப் புலிகள் மண் அணை ஒன்றைக் கட்டியிருந்ததாகவும் —

படை நகர்வின் ஆரம்பத்தில் புலிகள் கடுமையாக எதிர்த்தனர், என்றும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

முன்னேறும் படையினர் மீது புலிகள் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும்—

புலிகளின் நிலைகளை ஸ்ரீலங்கா விமானப்படையின் எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் விமானங்களும், பீரங்கிப் படைப்பிரிவும் தாக்கி அழித்ததாகவும்—

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவத் தோல்வியை சமாளித்து மழுப்புவதற்கான நடவடிக்கயே ஆனையிறவில் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (உ-3-5-10)

### ஆயுதப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளவரும், யுத்தத்தின் வீரசேனாதிபதியாக விளங்குகின்றவருமான ஓர் அரசியல்வாதியின் மகனே ஆயுத இறக்குமதியில் பணம் சம்பாதிப்பதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பான சாட்சியங்கள், சான்றுகள் தம்மிடம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

''ஐ. தே. கவின் எம். பியாக கடந்த 19 வருடங்களாக இருந்து வருகிறேன். இப்போது அக்கட்சியின் பொதுச் செயலாளர் நான். இந்த வகையில் நாடாளுமன்றத்தில் நான் தந்த இத்தகவல்கள் பொறுப்புடன் வெளியிடப்பட்டவையாகும்.

'' நான் கூறும் குற்றச் சாட்டுகளை நிரூபிக்கக் கூடிய சான்றுகள் என்னிடம் உள்ளன. அக்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எனக்கு இப்போது வாய்ப்புக்கிட்டாவிடினும் நாங்கள் இது பற்றி விசாரித்து பொது நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துவோம். '' — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் தான் யார் மீது குற்றம் சுமத்துகின்றார் என்பதை நேரடியாகப் பெயர் கூறி அவரின் பெயரை வெளிப்படுத்த அவர் மறுத்து விட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து தகவல் வெளியிட்ட செய்தி நிறுவனம் ஒன்று — ஸ்ரீலங்காவில் பொதுமக்களின் பிள்ளைகள் ஆயிரக்கணக்கில் போரில் உயிர்துறக்கையில், யுத்தத்தை நடத்தி வருவோரின் பிள்ளைகள் ஆயுதப்பேர மோசடியில் பணம் சம்பாதிப்பதாக தகவல்கள் வெளியாகின்றன என்று குறிப்பிட்டது. (உ-3- 10)

### தற்போதைய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்.

எனினும் முல்லைத்தீவு, கிளிநொச்சி தாக்குதல்கள் காரணமாக அரசின் சமாதானத் தீர்வுத்திட்டத்துக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.— என்று அவர் சொன்னார்.

திரு. சித்தார்த்தன் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:-

இந்த யுத்தம் பொது மக்களை பெரியளவில் பாதித்துக் கொண்டிருக்கிறது. வடக்கில் மாத்திரம் அல்ல; தெற்கிலும் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள்.

வடக்கில் ஷெல், விமானத் தாக்குதல்களால் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

நீண்டகாலமாக மக்களின் அழிவைத்தான் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியம்.

தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து அரசுடன் பேசிவருகிறோம். ஆனால் பலன் எதையும் காண முடியாதுள்ளது.

தங்களுக்கு முல்லைத் தீவில் ஏற்பட்ட பாரிய தோல்விக்கு ஒரு மாற்றீடாக அரச படைகள் கிளிநொச்சித் தாக்குதலை மேற்கொள்வது போல இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். நாங்களும் அப்படித்தான் கருதுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த அகதிகள் கிளிநொச்சியில் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு முறை அகதிகளாகி இன்று அங்கிருந்தும் இடம் பெயர்ந்து ஓடிக் கொண்டிருப்பதாக செய்திகள் மூலம் அறிகிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் எந்த விடயத்திலும் அது உறுதியான நிலைப்பாடு எடுப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவோ போர் சம்பந்தமாகவோ அவர்களிடம் உறுதியான நிலைப்பாடு இல்லை.

முல்லைத்தீவுத் தாக்குதலை தமது அரசியல் லாபத்துக்கு ஐ. தே. க. பயன்படுத்துவது போலத் தெரிகிறது - என்றார். (அ-3)

## அச்சுவேலியில் கட்டாக்காலி களவு

அச்சுவேலி, ஜூலை 28

அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்படுவதாக புகார் செய்யப்படுகிறது.

வன்னிப்பகுதிக்கு இடம் பெயர்ந்த வலிகாமம் பகுதி மக்களின் வளர்ப்பு மாடுகள் கட்டாக்காலியாகத் திரிகின்றன.

அவற்றைப் பொறிவைத்து பிடித்து களவாக இறைச்சிக்கு சிலர் விற்பதாகவும், பெருமளவு மாடுகள் குறி மாற்றம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது (அ-11)

### முல்லைத்தீவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் வரை அறிவிக்கப்பட்டது

ஆனால் நேற்று முல்லைத் தீவு குறித்து மௌனம் சாதிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் செய்தித் தணிக்கைக்கு உட்படாத வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் வித்தியாசமான தகவல்களை வெளியிட்டன. (உ)

### கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணிசமான தொகுதியினர் இடம்பெயர்ந்திருந்தனர்.

இதனையடுத்து தற்போதைய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்குச் சற்று முன்னர் கிளிநொச்சி மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இராணுவம் கேட்டிருந்தது தெரிந்ததே.

இந்த அறிவித்தலை அடுத்தும், இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதை அடுத்தும் மக்கள் கிளிநொச்சியிலிருந்து பெருமளவில் இடம் பெயர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதாக தொண்டர் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் கூறியிருப்பது தெரிந்ததே.

சுமார் ஒரு லட்சம் மக்கள் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து தற்போது இடம் பெயர்ந்திருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (உ-3-5-10)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சிரோன்மணி

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை சிரோன்மணி அவர்கள் 27-07-96 (சனிக்கிழமை) காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி செல்லத்துரை (ஆசிரியர் யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை) யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சத்தியசீலன், அருந்ததி, கேசவராஜன் (அதிபர், மானி.இந்து) செல்வமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணேஸ்பரன், காலஞ்சென்ற ஜெகதாம்பிகை, கமலாம்பிகை, சுபத்திராதேவி (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புமாமியாரும், சத்தியகுமார், ஜெகத்குமார், வாசுகி, ஈஸ்வரகுமார், கௌரிக்குமார், திருமதி சியாமளா சாந்தபவன், ஜீவகன், சந்திரிக்கா (ஆசிரியை மானி. மகளிர் கல்லூரி), சபேசன், பிரதாபன், திலீபன், தக்ஷாயினி, வரப்பிரதன் ஆகியோரின் பேர்த்தியும், திபனா, தாரிணி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (28-07-96) ஞாயிறு காலை 10-00 மணிக்கு 'பிப்பிலி' மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி ப. கணேஸ்பரன்

திரு. செ. கேசவராஜன்

செட்டிவளவு,

மானிப்பாய் தெற்கு,

மானிப்பாய்.

(42001)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org